**செ.வெ.எண் - 32** **நாள்:19.03.2018**

# அரியலூர் மாவட்டத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், **"மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்"** மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தலைமையில் இன்று **(19.03.2018)** நடைபெற்றது.

இக்கூட்டத்தில், முதியோர் உதவித்தொகை, அம்மா இருசக்கர வாகனம், இலவச வீட்டுமனைப்பட்டா, தொகுப்பு வீடுகள், திருமண நிதியுதவித் திட்டம் போன்ற பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய **220** மனுக்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டு, இம்மனுக்கள் மீது சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 3 மாற்றுத்திறனாளிகளுக்கு **ரூ.20,820/-** மதிப்பில் மூன்று சக்கர வண்டிகளையும், 3 மாற்றுத்திறனாளிகளுக்கு **ரூ.44,610/-** மதிப்பில் நவீன செயற்கை கால்களையும் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் வழங்கினார்கள்.

பின்னர், மாற்றுத்திறனாளிகள் வரிசையில் காத்திருக்காமல், அவர்களுக்கான தனி இருக்கையில் அமர்ந்திருந்த மாற்றுத்திறனாளிகளிடம் கோரிக்கை மனுக்களை பெற்று, அம்மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் உத்தரவிட்டார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சே.தனசேகரன், துணை ஆட்சியர் (சமூகபாதுகாப்புதிட்டம்) அ.பூங்கோதை மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**